## 32.5 தமிழரசு இதழுக்கு ஆயுள் சந்தாதாரர்கள் சேர்த்தல்

செய்தி மற்றும் சுற்றுலா ( நிர் 4) த் துறை

அரசாணை (நிலை ) எண் 160 நாள் : 24.7.2000

படிக்க :

(1) அரசாணை (நிலை) எண் 158, செய்தி மற்றும் சுற்றுலா (நிர் 4) த்துறை,நாள் 8.6.1993.
(2) அரசாணை (நிலை) எண் 130, செய்தி மற்றும் சுற்றுலா (நிர் 4) த்துறை,நாள் 23.6.1999.
(3) முதலமைச்சர் செயலகம் எண் 5059/மு,செ/இ.செ / 2000. நாள் 21.2.2000.

**ஆணை**

பார்வை 3–ல் படிக்கப்பட்ட கடிதத்தில் தமிழரசு இதழுக்கு ரூ.1000/– (ரூபாய் ஆயிரம் மட்டும்) வீதம் ஆயுள் சந்தா நிர்ணயித்தால் அதன் மூலம் வரும் வட்டி தொகையை கொண்டே தமிழரசு இதழ்களையும், சிறப்பு வெளியிடுகளையும் சந்தாதாரருக்கு அனுப்பி வைக்கமுடியும் இதை முழுமுனைப்பாக செய்தால் 50,000 க்கும் மேற்பட்ட சந்தாதாரர்களைச் சேர்க்கலாம் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

(2) தற்போது தமிழ்ரசு இதழுக்கு ஆண்டு சந்தா ரூ.120/– (ரூபாய் நூற்று இருபது மட்டும்) நிர்ணயம் செய்து அதனடிப்படையில் சந்தாதாரர்கள் சேர்க்கப்படுகிறார்கள். ஆண்டுதோறும், சந்தாதாரர்களை புதுப்பித்துக் கொள்வது சிரமமாக இருப்பதால் சந்தாதாரர்கள் எண்ணிக்கை குறைந்து வருகிறது. நிலுவையாக உள்ள சந்தாதாரர்களையும், அரசு ஆண்டுதோறும் புதுப்பிக்க வேண்டியிருப்பதால், நேரமும் தபால் செலவும் அதிகமாகின்றன.

(3) அரசின் கவணமாக பரிசீலனைக்கு பின்னர் தமிழரசு இதழுக்கு தற்போது நடைமுறையில் இருந்து வரும் ஆண்டு சந்தா என்பதுடன் ஆயுள் சந்தா முறையினையும் ஏற்படுத்தி பின்வருமாறு ஆணையிடப்படுகிறது.

அ, ஆயுள் சந்தா என்பதை 10 ஆண்டுகள் என கணக்கிட்டு ஒவ்வொரு பத்தாண்டிற்குப் பிறகும் தற்போழுது நிர்ணயித்துள்ள ஆயுள் சந்தா ரூ.1000/– என்பதை மறு நிர்ணயம் செய்து கொள்ளப்படவேண்டும்.

ஆ, பள்ளிகளைப் பொறுத்தவரையில் தற்பொழுது நடைமுறையில் உள்ளது போன்று ஆண்டு சந்தா ரூ.120/– என்ற நடைமுறையே தொடர்ந்து பின்பற்றலாம் என கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இ, ஆயுள் சந்தா தொகையினை பகுதி பகுதியாக என்றில்லாமல் ஒரே தடவையில் பட்டியல் தயார் செய்து ரூ.1000 செலுத்தப்பட வேண்டும். எனவே தமிழரசு இதழ் ஆயுள் சந்தா ரூ.1000/– என்பதை ஏற்று சந்தா கால வரையறை 10 ஆண்டுகள் என நிர்ணயம் செய்யப்படுகிறது.

(4) பார்வை 1–ல் படிக்கப்பட்ட அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து கூட்டுறவு சங்கங்கள், ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சிகள், நகராட்சிகள், மாநகராட்சிகள், மகளிர் மன்றங்கள், கல்லூரிகள், வட்டார நூலகங்கள் போன்ற நிறுவனங்களை ரூ.1000/– (ரூபாய ஆயிரம் மட்டும்) ஆயுள் சந்தாதாரர்களாக சேர்க்கலாம் எனவும் மேற்குறிப்பிட்ட நிறுவனங்கள் ஆயுள் சந்தாதாரர்களாக தமிழரசு வாங்குவது தொடர்பாக ஏற்படும் செலவினம் அந்நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள சில்லரைச் செலவின நிதியிலிருந்து சேர்த்துக்கொள்ளலாம் என அனுமதி அளிக்கப்படுகிறது.

(5) மேலே பத்தி 1/ல் குறிப்பிட்டுள்ளவாறு தமிழரசு ஆயுள் சந்தாதாரர்கள் 50,000 மேல் சேர்ப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்குமாறு துணை இயக்குநர் (வெளியீடு) தமிழரசு கேட்டுக்கோள்ளப்படுகிறார்.

(6) இவ்வானை நிதித்துறையில் அலுவல் சார்பற்ற குறிப்பு எண் 55605/BR & R / 2000–1, நாள் 21.7.2000. இசைவு பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**மா.ராமு**
அரசு செயலாளர்